









# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 12 2.04.2026



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## வாத ப்ரதிவாத பகவத் ராமானுஜ விஷயங்கள்-1

ஸ்ரீ:

கடலமுதத்தைக் கடைந்து சேர்த்த திருமால்

அடிகாட்டிய நம்தேசிகர் தம்நிலை பற்றிச் சேர்ந்தோமே.

வாத ப்ரதிவாத பகவத் ராமானுஜ விஷயங்கள்-1

நியோஜ்ய விபோஷணம் என்பது

செயல் + அதற்கு சேரும் விசேஷ அலங்காரம்

லௌகீக உதாரணங்கள்

சாதாரண உலகியலில் இது மிகவும் எளிதாகப் புரியும். ஒரு செயலை மட்டும் சொல்லாமல், அதை சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கூடுதல் அலங்காரத்துடன் கூறுவது தான் இங்கு.

1.வெள்ளை உடை அணிந்து கூட்டத்திற்கு வாருங்கள்”

வருதல் → நியோஜ்யம்

வெள்ளை உடை → விபோஷணம்

2.திலகம் இட்டு பூஜை செய்ய வேண்டும்”

பூஜை செய்தல் → நியோஜ்யம்

திலகம் இட்டல் → விபோஷணம்

3.மாலையணிந்து மணமகன் வர வேண்டும்”

வருதல் → நியோஜ்யம்

மாலை அணிதல் → விபோஷணம்

4.அலங்கரித்து குழந்தையை பள்ளிக்கு அனுப்புங்கள்”

அனுப்புதல் → நியோஜ்யம்

அலங்காரம் → விபோஷணம்

5.சுத்தமான பாத்திரத்தில் உணவு பரிமாறுங்கள்”

பரிமாறுதல் → நியோஜ்யம்

சுத்தமான பாத்திரம் → விபோஷணம்

சுருக்கம்:

செயல் + அதற்கு சேரும் விசேஷ அலங்காரம் = நியோஜ்ய விபோஷணம்

இது எல்லா இடத்திலும் நம்முடைய நாளந்தோறும் பேச்சிலேயே நடக்கிறது.

நச்சுனு 4 வரி தமிழ் பா....

செய்யென நியோஜ்யம் சொல்; செம்மை சேர்வது விபோஷணம்,

செய்கை விசேஷம் சேர்ந்தால் செழுமையுடன் உயரும்;

அலங்காரம் இணைந்திட அர்த்தம் தெளிவாய் விளங்கும்—

நியோஜ்ய விபோஷண நியாயம் இதுவே.

----தாஸன் ஆஸூரி ஸ்ரீதரன்

நீயா நானா என்பது நீசப்போட்டி;

அரியா அரனா என்பது அறியாமைப் போட்டி;

அந்த பெருமானா இந்த பெருமானா என்பது அனுபவப் போட்டி;

பிற போட்டியைத் தவிர்த்து, பெருமான் பற்றி போட்டி இடுவதும் போற்றி பாடுவது போலத்தான்!

## ஸ்வாமி தேசிகன் தமிழில் ஏழு பிரபந்தங்கள் அருளினார்; அவை :

1. மும்மணிக்கோவை - முத்து, வைரம், பவழம் ஆகிய மூன்று மணிகளை வரிசையாகக் கோர்த்து மாலை செய்தால் எத்தனை அழகாக இருக்கும் ! அதுபோல, மூன்று விதமான பாசுரங்களை வரிசையாக மாற்றிமாற்றி அமைத்து, கோர்வையாக்கி அருளிய நூல் இது; மூன்று மூன்றாக பத்து மூன்று சேர்த்து முப்பது பாசுரங்கள்.
2. நவமணிமாலை - நவரத்னங்களைக் கோர்த்து செய்த மாலை போல, ஒன்பது விதமாக பாக்களைக் கோர்த்து அருளிய நூல்; சொல்லச் சொல்ல செவிக்கு இனிமையானது; பத்து பாசுரங்கள்.
3. பந்துப்பா - பந்தாடும் பெண்டிர் பாடும் பாவகை.
4. கழல்பா - கழல் காய்கள் ஆடும் பெண்டிர் பாடும் பாவகை.
5. அம்மானைப்பா - கும்மியடிக்கும்போது பாடும் பாவகை.
6. ஊசல் பா - ஊஞ்சல் பாட்டு.
7. ஏசல் பா - பிறரை ஏசிப் பெருமானை ஏத்திப் பேசும் பாட்டு.

